# அலைமாடம்

## கலை இலக்கிய சஞ்சிகை – 2014

## அலை – 02




தமிழ்மன்றம்

யா/புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை

# அலைமாடம்

## கலை இலக்கிய சஞ்சிகை

2014

அலை 02

தமிழ்மன்றம்

யா/ புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| இதழின் பெயர் | : அலைமாடம் |
| இதழாசிரியர் | : செல்வி இ. நிறோஜா |
| பொறுப்பாசிரியர் | : திரு. ந. சசிகுமார் |
| அட்டைப்படவடிவமைப்பு | : கோல்டன் பதிப்பகம்,திருநெல்வேலி |
| பக்கங்களின் எண்ணிக்கை | : 60 |
| வெளியீடு | : தமிழ்மன்றம் |
| | யா/ புனித அந்தோனியார் கல்லூரி |
| | ஊர்காவற்றுறை |

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

## கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்மன்றத்தினால் வெளியிடப்படும் "அலைமாடம்" எனும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரி மாணவர்கள் பல்வேறுபட்ட போட்டிகளில் தமது தனித்துவமான திறமையினை வெளிக்காட்டத் தவறுவதில்லை. ஆற்றல்கள் போட்டிகளோடு மட்டும் நின்றுவிடாது அவ்வாற்றல்களும் திறமைகளும் ஏனையவர்களையும் சென்றடைய வேண்டும். இச் சஞ்சிகையிலும் மாணவர்களின் தேடல்களையும் ஆக்கத் திறனையும் கண்டுகொள்ளலாம். இச்சஞ்சிகையில் வெளிப்படப்பட்டுள்ள விடயங்கள் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தருவதுடன் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பாக அமையும். ஆண்டுதோறும் "அலைமாடம்" வெளிவந்திட வாழ்த்துகிறேன்.

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர்
அதிபர்

## பொறுப்பாசிரியரிடமிருந்து.......................

எமது பாடசாலையில் தமிழ் மன்றத்தினரால் அலைமாடம் எனும் சஞ்சிகை வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பூமிக்கடியிலுள்ள தங்கத்தை தோண்டியெடுத்து விதவிதமான அழகான ஆபரணங்களை உருவாக்குவது போல மாணவர்களிடம் மறைந்துள்ள ஆற்றல்களை நேர்த்தியாக வெளிக்கொணர்வதற்கு இச்சஞ்சிகை உதவியுள்ளது. மாற்றமுறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மாற்றம் என்பது காலத்தின் நியதி இன்று கற்றல் கற்பித்தல் செயற்பாடானது நவீன மயப்படுத்தப்பட்டு பல்துறையிலும் பரிணாம வளர்ச்சி கண்டு வருகிறது. இந் நிலையில் மாணவர்களின் ஆக்கத்திறனை அதன் வெளிப்பாடுகளை பாடசாலையிலே வளர்க்க வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் இது போன்ற சஞ்சிகைகள் மாணவர்களின் ஆக்கத்திறனை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை

திரு.ந.சசிகுமார்

## தலைவரின் உள்ளத்திலிருந்து ...

ஊர்காவற்றுறையின் கலங்கரை விளக்காக ஒளிரும் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றத்தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறேன். இரண்டாவது சஞ்சிகையாக 2014 ஆம் ஆண்டு சிறப்பாக வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இச் சஞ்சிகை எமது கல்லூரி மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்களைக் கொண்டு பல்துறை சார்ந்து வெளிவருகின்றது.

மற்றும் இச் சஞ்சிகை வெளியிடப்படுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர்,ஆசிரியர்களுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

செல்வி ம.மயூரி
தமிழ்மன்றத் தலைவர்

## இதழாசிரியரிடமிருந்து……

எமது பாடசாலையில் **அலைமாடம்** என்கின்ற இச்சஞ்சிகை வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மாணவர்களுடைய தேடல்களின் வெளிப்பாட்டினையும் அவர்களுடைய ஆக்கத்திறனையும் அறிவியல் பார்வையினையும் இவ்விதழினூடாகக் கண்டுகொள்ளலாம். சஞ்சிகை ஆக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மிகக் குறுகிய காலத்தில் இச்சஞ்சிகை மிக்க சிரமத்தின் மத்தியில் வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும். இது போன்ற இதழ்கள் இனிவரும் காலத்திலும் வெளிவரவேண்டும் என்பதே அனைவரதும் அவா. இவ் அவா செயல் வடிவம் பெற்றிட இறைவன் அருள்புரிவான்.

செல்வி. இ. நிரோஜா
இதழாசிரியர்

அலையின் உள்ளே...... பக்கம்


| | | |
|---|---|---|
| 1) | விளையாட்டின் பயன்கள் | 01 |
| 2) | விஞ்ஞான வளர்ச்சியும் மனித வாழ்வும் | 02 |
| 3) | தமிழின் இனிமை | 03 |
| 4) | முத்தமிழ் | 05 |
| 5) | தமிழ்ப்பற்று | 06 |
| 6) | அம்மா | 07 |
| 7) | சிந்திக்க சில வரிகள் | 07 |
| 8) | செந்தமிழ் | 08 |
| 9) | வெற்றியின் இரகசியம் | 08 |
| 10) | பெருமை பேசினால் ஆபத்து | 09 |
| 11) | அறிந்து கொள்வோம் | 10 |
| 12) | மலரே | 10 |
| 13) | அன்னை | 11 |
| 14) | கல்வி | 12 |
| 15) | காந்தித் தாத்தா | 12 |
| 16) | இயற்கை | 13 |
| 17) | விடுகதைகள் | 14 |
| 18) | விடியலுக்காக | 15 |
| 19) | ஆண்டு நிறைவு விழாக்கள் | 16 |
| 20) | பொது அறிவு | 16 |
| 21) | மாணவர் நாம் | 17 |
| 22) | எங்கள் பாடசாலை | 18 |
| 23) | விடுகதைகள் | 19 |
| 24) | பழமொழிகள் | 20 |
| 25) | தொடர்மொழிக்கு ஒரு மொழி | 21 |
| 26) | சிறுவர் | 21 |
| 27) | ஆங்கிலமும் கணணியும் | 22 |
| 28) | வாழ்வு | 22 |
| 29) | விடுகதைகள் | 23 |
| 30) | அன்னையைப் போல் | 23 |
| 31) | அம்மா என்ற சொல் | 24 |
| 32) | அச்சம் தவிர் | 26 |
| 33) | மொழிவளம் | 27 |
| 34) | உண்மை பேசுவோம் | 28 |
| 35) | நட்பு | 29 |
| 36) | ஆசிரியத்தொழிலும் கல்வி உளவியலும் | 30 |

# விளையாட்டின் பயன்கள்

இந்த உலகில் பல்வேறு பொழுதுபோக்குகள் உள்ளன. முத்திரை சேகரித்தல், தோட்டம் செய்தல், சித்திரம் வரைதல், என்பன அவற்றுள் அடங்கும். அவற்றுள் விளையாட்டும் ஒன்றாகும். விளையாடுவதனால் அழகான உடற்கட்டமைப்பு, உடல் வலிமை, துணிச்சல், ஆரோக்கியம், நல்ல உள்ளம், படிப்பில் ஆர்வம், என்பன ஏற்படும். அதுமட்டுமன்றி விளையாடுவதால் ஒரு சில தீமைகளும் உள்ளன. அவற்றுள் காயங்கள் ஏற்படல், கை, கால் முறிவு என்பன ஏற்படல், மூட்டு வலி, கை, கால் வலி ஏற்படல் என்பன அவற்றுள் ஒரு சிலவாகும். இருந்தாலும் விளையாட்டு மூலம் ஏற்படும் தீமைகளை விட நன்மைகளே அதிகமாகும்.

இந்த உலகில் பல வகையான விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கிரிக்கெட், கைப்பந்தாட்டம், காற்பந்தாட்டம், எல்லே, சதுரங்கம், சடுகுடு, டாம் என்பன அவற்றுள் சிலவாகும். அரசாங்கம் விளையாட்டுக்கு சட்ட திட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடிக்குமாறு கூறியுள்ளது. இருந்தும் இப்போதைய மாணவர்கள் மற்றும் மக்கள் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை. அவற்றைக் கடைப்பிடிப்பதால் பல நன்மைகள் உள்ளன. அவற்றுள் விபத்துக்களை தவிர்க்கலாம், கை, கால் முறிதல் என்பவற்றை தவிர்க்கலாம், பிறர் பாராட்டுக்களை பெறலாம் என்பன சிலவாகும். எனவே மாணவர்களாகிய நாம் இளம்பராயத்திலிருந்தே விளையாட்டுக்கு சட்ட திட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் மதித்து செயற்படுவோம்.

பி. கமல்ராஜ்
தரம் - 07B

## விஞ்ஞான வளர்ச்சியும் மனித வாழ்வும்

விஞ்ஞான யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் மிகவும் வினைத்திறன் மிகுந்த மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இன்று விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சியினால் பல துறைகளிலே பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. பலவிதமான நன்மைகள் ஏற்பட்டுள்ள அதேவேளை தீமைகளும் ஏற்பட்டுள்ளன. மனித வாழ்வானது விஞ்ஞானத்தின் செயற்பாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானத்தில் பல கண்டுபிடிப்புக்களும் பல அதிசயங்களும் நிகழ்ந்துள்ளன.

முதலில் நாம் மருத்துவத்துறையினை எடுத்துக் கொண்டால் மருத்துவமானது மிகவும் முக்கியமான துறையாகும். மனித வாழ்விற்கு இன்றியமையாத ஒன்றாக மருத்துவம் காணப்படுகின்றது. மருத்துவர்கள் விஞ்ஞானத்தினுடைய அறிவினை பயன்படுத்தியே பல மருத்துவத்தினை மேற்கொள்ளுகின்றார்கள். விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது மருத்துவத்துறையினை சிறப்பாக மேற்கொள்ள மிகவும் உதவுகின்றது. இன்று ஒவ்வொரு நோய்களையும் குணப்படுத்தும் கருவிகள் பல உருவாகியுள்ளன. இதற்கெல்லாம் காரணமாக அமைவது என்னவென்று பார்த்தால் அது விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சியே ஆகும்.

முன்னைய காலத்தில் தொழில்நுட்ப சாதனங்களானது மிகவும் குறைவாக காணப்பட்டது. ஆனால் இன்றைய காலத்தில் விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் மக்களின் வாழ்க்கை முறையினை இலகுவாக்கியுள்ளது. அறிவியல் துறையிலே பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றிற்குக் காரணம் விஞ்ஞானத்தினுடைய துரித வளர்ச்சியே ஆகும். இந்த 21ம் நூற்றாண்டினை தொழில்நுட்ப யுகம் என்று அழைப்பர். ஏனென்றால் இவ் யுகத்திலே பல புதிய கண்டுபிடிப்புக்களே காரணம் எனலாம். இன்று மேலைத்தேய நாடுகளிலே கற்றல் கற்பித்தல் முறைகளும் மாறியுள்ளன. இதனால் மாணவர்கள் கற்பதற்கும் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் மிகவும் இலகுவானதாகவும் விளங்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

தொழில்நுட்பத் துறையை எடுத்துக் கொண்டால் இன்றைய சமூகத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியானது மென்மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதனால் பலர் பல வழிகளில் பல தகவல்களை பெற்றுக் கொள்கின்றனர். இதற்கெல்லாம் காரணமாக அமைவது விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சியாகும். இவ்வாறு பல துறைகளில் பல நன்மைகள் ஏற்பட்டாலும் சிலவேளைகளில் தீமைகளும் ஏற்படுகின்றன. இவ் விஞ்ஞான வளர்ச்சியால் மனித வாழ்விற்குள் பலவிதமான சிக்கல்களும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

எனவே 21ம் நூற்றாண்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சியின் மூலம் நன்மைகளை ஏற்படுத்தி தீமைகளை கட்டுப்படுத்தி வாழவேண்டும்.

ம. சதாஜினி
A/L (2015) கலைப்பிரிவு

# தமிழின் இனிமை

மெல்லத் தமிழின் சாகுமென்றான் தமிழன்
மூச்சென வாழ்ந்த நம் கவிப்பெருமான்
சொல்லில் பொதிந்த பேர் உண்மைதனை - இன்று
சான்றோடு கூறுதல் சாலுமன்றோ

அகர முதல் எழுத்தனைத்தும் - அன்று
ஆரம்ப வகுப்பில் கற்று அறிந்தோம்.
நிகர மொழி யொன்றும் மன நினைவில்
ஊன்றிட கல்வி பயின்றோம்.

சிறு வயதில் கற்ற தமிழினிமையை
எம் இறப்பு வரைக்கும் கற்று சென்றோம்.
அம்மா என்ற மூன்றெழுத்து மந்திரம் கூட
நம் இனிய தமிழ் தானே

பிறந்தவுடன் ஒரு பிள்ளை உச்சரிக்கும்
சொல்லானது தமிழ் இனிமைதான்
பண்டைய காலத்திலிருந்து இன்று வரை
தமிழை நேசிக்காதவன் எவராவது – உண்டோ

உலகில் ஒவ்வொரு மனிதனும் - தமிழின்
இனிமையை உச்சரித்துக் கொண்டு செல்கிறார்கள்
தமிழின் இனிமையை சங்க காலத்தில்
தமிழிற்கு சொல் அழகு
சொல்லிற்கு இனிமை அழகு
தமிழையும் சொல்லையும் நேசிக்காதவன்
இவ்வுலகில் எவன் இல்லை

தமிழுக்கு அமுதென்று கூறுவர்
தமிழை பல பெயர்களால் அழைத்து
அதன் இனிமையை மெருகூட்டிக்
கொண்டு செல்கிறார்கள்

கடவுள் படைத்த அழகிய ஓவியமே
தமிழ் நம் கண்ணுக்குள் - இமை
இருப்பது போல் நம் மக்கள் அனைவரிடமும்

சொல்லச் சொல்ல இனிக்கும்
சொல்லும் போதும் இனிக்கும்
அந்த அளவுக்கு நம் தமிழ் இனிமை
தமிழின் இனிமையை சொல்லவே தேவையில்லை

ஆக்க இலக்கியங்கள் படைப்பவர்கள் - இன்று
அருகிப் போனாலும் தமிழை
உயர்த்துவதற்காகவே ஒரு சில – அறிஞர்கள்
உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்
தமிழை நேசிப்போம்
தமிழின் இனிமையையும் நேசிப்போம்

ச. ஜெகப்பிரியா
A/L (2015)
கலைப்பிரிவு

## முத்தமிழ்

தமிழ் என்பது மூன்றெழுத்து
அதனை இனிமையுடன் பேணுவது
நம் ஒவ்வொருவரின் பெருமை
தமிழின் இனிமை நல்ல தமிழ்

தமிழ் முத்தமிழ் பெருந்தமிழ்
வள்ளுவர் கூறுவது செந்தமிழ்
மானிடன் தழுவுவது செய்யுள் தமிழ்
நாம் போற்றுவது தமிழ் இனிமை

தமிழே நல்ல தமிழ்
அது சிறந்த தமிழ்
தமிழர் போற்றுவது தமிழ்மொழி
நாம் பேசுவது தமிழ்மொழி

தமிழ்மொழி இனிமை
அதன் தமிழ் இனிமை இன்னும்
சிறந்த ஓசை நயம்
தமிழே செம்மொழி சிறந்த தமிழ்

தாயகம் போற்றுவது தமிழ்
புலவர் போற்றுவது கலைத்தமிழ்
முன்னர் புகழ் பாடுவது பன்மொழித்தமிழ்
மழலை பேசுவது தமிழ்

தமிழே தூய தமிழ்
நல்ல சிறந்த தமிழ்
வாழிய நல்ல தமிழ்
வளர்க நம் தமிழே

ஜீ. பகிர்தா A/L (2014)
கலைப்பிரிவு

# தமிழ்ப்பற்று

அகரம் ஆதியாய் கொண்ட மொழி
அகிலம் போற்றும் நல்ல மொழி
ஆதியாய் வாழ்ந்த இனிமை மொழி
அதுவே தமிழின் இனிமை மொழி

மூன்று காலங்கள் கொண்ட மொழி
மூவேந்தர்கள் காத்த மொழி
மூவுலகம் போற்றும் மொழி
மூன்றே எழுத்தில் இனிமை மொழி

சிகரத்தின் ஒளியாய்
சிரிப்பின் மொழியாய்
சிந்தைகள் வளர்த்திடும்
சிறந்த மொழி – அது இனிமை மொழி

வாழ்வு சிறக்க
வசந்தம் மலர
வாழ்வாங்கு வாழ்ந்து
வரப்பிரசாதமாய் அமைந்த இனிமை மொழி

காப்பிய காவியம் படைத்த மொழி
காலங்கள் கடந்து வாழும் மொழி
கனிவும் இனிமையும் புகட்டும் மொழி
கலங்கரை விளக்காய் திகழும் மொழி

இன்றும் என்றும் வாழும் மொழி
இன்றைய உலகின் மூத்த மொழி
இளைஞர்கள் பலரும் விரும்பும் மொழி
இனிமை கொண்டது தமிழ் மொழி

பா. மதுஜினி
A/L (2014)
வர்த்தகப்பிரிவு

## அம்மா

பத்து மாதம் சுமந்தவளாய்
பாரினிலே உயர்ந்தவளாய்
பஞ்சைப் போன்ற மனம் உடையவளாய்
தாலாட்டம் தாய் மரியாய்
என்னைத் தன் உயிர் என்று நினைத்தவளாய்
தன் இரத்தத்தினை பாலாக்கி
எமக்காய் என்றும் வாழ்பவளாய்
பாரினிலே உதித்தவள் தான் அம்மா

பி. டொறைக்சன்
தரம் - 7B

## சிந்திக்க சில வரிகள்

- உன் கடமையைச் செய்ய உறுதி கொள். நீ உறுதி செய்ததை தவறாமல் நிறைவேற்று.
- எல்லாம் இழந்தாலும் எதிர்காலம் இன்னும் இருக்கிறது.
- சிறிதளவு உள்ளவன் ஏழையல்லஇ ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.
- எந்த மனிதனும் இறைவனுடைய ஆசீர்வாதம் இல்லாமல் உயர்ந்த மனிதனாக இருந்திருக்க முடியாது.
- சரியாகவும் உண்மையாகவும் உழைப்பதே கடவுளிடம் கூட்டிச் செல்லும் பாதை.

வி.விவக்சன்
தரம் 8B

## செந்தமிழ்

உலகாளும் சிறுவர்களே – நீங்கள்
சேர்ந்து பாடுங்கள் - நம்
செந்தமிழ் இசைப்போம்
சேர்ந்து பாடுங்களே!

நல்ல தமிழ் இசைத்தால்
சிறுவர்களே உங்கள் நாவில்
செந்தமிழ் ஊறும் சிறுவர்களே!

ஒற்றுமையாய் செந்தமிழை
நீங்கள் கற்க வேண்டும்
ஒருவரோடு ஒருவர் இணைந்து
இவ்வுலகை ஆள வேண்டுமே!

வி.கஜனன்
தரம் -9B

## வெற்றியின் இரகசியம்

- அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே.
- இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து விடாதே.
- பணிவாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே.
- தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே.
- பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே.
- உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே.

ஜீ. மிலோஜன்
தரம் - 9 B

# பெருமை பேசினால் ஆபத்து

கடலில் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று கவிழ்ந்தது. அதில் பயணம் செய்த குரங்கு ஒன்று தண்ணீரில் தத்தளித்தபடி உயிருக்காகப் போராடியது. அங்கே வந்த டொல்பின் ஒன்று குரங்கின் நிலையைப் பார்த்தது. குரங்கே! என் முதுகில் அமர்ந்து கொள் உன்னைப் பாதுகாப்பான இடத்தில் கொண்டு போய் விடுகிறேன் என்றது. குரங்கும் அதன் முதுகில் ஏறி அமர்ந்தது.

டொல்பின் நீந்தத் தொடங்கியது. நீண்ட நேரம் நீந்தியதால் அது களைப்பு அடைந்தது. அப்போது அருகில் இருந்த தீவு ஒன்று அதன் கண்ணில் பட்டது. மனிதர்களோ, விலங்குகளோ இல்லாத தீவு அது. சிறிது நேரம் அங்கே ஓய்வு எடுப்போம், பிறகு குரங்கைச் சுமந்து சென்று மனிதர்கள் உள்ள இடத்தில் விடுவோம், என்று டொல்பின் நினைத்தது. மெல்ல நீந்திய டொல்பின் அந்தத் தீவின் கரையை அடைந்தது.

தீவைப் பார்த்து குரங்கு மகிழ்ச்சியாக கத்தியபடி தீவுக்குள் ஓடத் தொடங்கியது. குரங்கே! எங்கே ஓடுகிறாய்? என்று கேட்டது. டொல்பின் தன்னைப் பற்றி பெருமையாக நினைக்க வேண்டும் என்று நினைத்த குரங்கு இளவரசனாக நானும் இந்தத் தீவின் இளவரசனும் நெருங்கிய நண்பர்கள், நான் பலமுறை இங்கே வந்திருக்கிறேன். எனக்கு இங்கு வயிறு நிறைய விருந்து தான், என்று கதைகூற அப்போ நீ! இந்த தீவின் இளவரசன் அல்ல மாறாக இன்று முதல் இந்தத் தீவின் அரசன் நீதான் என்றது டொல்பின்.

அப்போ நான் இந்தத் தீவின் அரசனா? எதனால் அப்படிச் சொல்கிறாய்? என்று மகிழ்ச்சியுடன் கேட்டது. பின் குரங்காரே நீரே தீவுக்குள் செல்லும், நீ அரசனானது உமக்கே தெரியும் என்று கூறி டொல்பின் தண்ணீருக்குள் மூழ்கி மறைந்தது.

குதித்தபடி தீவுக்குள் சென்றது குரங்கு. அங்கே மனிதர்களோ, விலங்குகளோ இல்லை என்பதை அறிந்தது. பெருமைக்காக பொய் பேசி இந்தத் திவில் சிக்கிக் கொண்டேனே நாம் பொய் பேசுவதற்கு இந்தத் தண்டனை தேவை தான் என்று குரங்கு அழுது புலம்பியது.

ஜீ.பிஜனுயன்

தரம் 6

## அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| ✤ பூமியைக் காட்டினும் பொறுமை மிக்கது | - | தாய்மை |
| ✤ காற்றை விட வேகம் உள்ளது | - | மனம் |
| ✤ பிறந்தால் அசைவின்றி இருப்பது | - | முட்டை |
| ✤ வேகத்தால் வளர்ச்சி பெறுவது | - | நதி |
| ✤ வாழ்க்கையில் பெரும் செல்வம் | - | நோயின்மை |
| ✤ இன் சொல்லால் வளர்வது | - | அன்பு |
| ✤ தீராத நோய் | - | பேராசை |
| ✤ உருகும் உள்ளத்தில் உதிப்பது | - | அகந்தை |
| ✤ இறுகும் இதயத்தில் இருப்பது | - | துன்பம் |
| ✤ ஒற்றுமையால் வருவது | - | இன்பம் |

ப.தர்சிகன்
தரம் - 8B

## மலரே

மலரே உந்தன் வாழ்க்கையினை
மறையா தெனக்கும் உரைப்பாயே
மலரே உன்னைச் செய்தவராரோ!
அரிய மணமும் அளித்தவராரோ!

பற்பல வர்ணம் தீட்டியவர் யார்?
பார்க்கப் பகட்டாய் படைத்தவர் யார்.?
கலகலவென்று சிரித்திடவே
கற்று நிதமும் கொடுத்தவர் யார்?

அரித்த நல்ல பூம்பொடியை
அழகாய் உடலில் பூசியதார்?
சிரிக்கும் உந்தன் செவ்வாய்க்கே
சீத அமுதம் வார்ப்பவர் யார்?

இ. சுலைக்சன்
தரம் - 7A

## அன்னை

அன்னை தமிழ் அவள் அரியணை ஏறினாள்
எங்கள் பள்ளியிலே
அன்னை மடியில் தவழ்ந்து வருகின்ற
சின்னஞ் சிறுவர்கள் நாம்

எந்த மொழிகளைக் கற்று வந்தாலும்
எங்கள் உயிர் தமிழே
எந்தையர் மொழி எம் சொந்த வழியினை
ஏற்ற முன் பயில்வோம்

சுந்தரத் தமிழைச் சுவைத்து மகிழ்ந்திடுவோம்
செந்தமிழ் சிறுவர்கள் நாம்
மந்திர சக்தியைத் தந்திடும்
தமிழ்த்தாயே

அன்னையின் அற்புத ஆற்றல்களை நாம்
பெற்று எழுந்திடுவோம்
அன்னையவள் துணையில் அகிலத்தை வென்றிடும்
சக்தியைத் பெற்றிடுவோம்

ப.சுலக்சன்
தரம் - 07B

## கல்வி

- ❖ எமது வாழ்க்கையிலே கல்வி முக்கியமானது.
- ❖ கற்பனையில் கற்றுக் கொள்வதல்ல கல்வி மாறாக கருத்துடன் கற்பத தான் கல்வி.
- ❖ ஆகாயம் வெள்ளமாக வந்தாலும் காணாமல் போகாதது கல்வி.
- ❖ கல்வி என்பது மூன்றெழுத்து அதனை கற்றுக் கொள்வதோ பல எழுத்து.
- ❖ எமது வாழ்க்கைக்கு உதவுவது கல்வி.
- ❖ கல்வியின் வேர் கசந்தாலும் அதன் பழம் இனிக்கும்.

ஸ்.மைக்சன் றொபட்

தரம் - 08

## காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா நம் தாத்தா
கருணை மிக்க பெருந் தாத்தா
சாந்த முர்த்தி என்றென்னும்
சத்திய முர்த்தி நம் தாத்தா

காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிப் சிறு பொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்

கண்ணிற் சிறந்த விடுதலையை
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழி காட்டினார் நம் தாத்தா

கி.மது
தரம் - 06

# இயற்கை

அழகான இயற்கையே!
உன்னை காண்பதற்காகவே
காலையில் கண்விழிப்பேன்!

இசை மழை பொழியும் இயற்கையே!
இன்பத்தில் வெற்றி கொள்வாய் இயற்கையே!
உன் இயற்கை காண்பதற்காகவே!
காலையில் நான் கண் விழிப்பேன்!

உன்னோடு பிறந்த மனிதர்கள்
உன்னை அழிக்கிறார்கள்
ஆனால் நீ மனிதர்களை அழிப்பதில்லை
ஏன் இயற்கையே பதில் சொல்!

இயற்கை நிறைந்த நாடு இலங்கை
என்று பாரதிதாசன் பாடியுள்ளார்
செயற்கை நிறைந்த நாடு என்று
ஒருவர் கூட கூறவில்லையே!

உயிர் ஓட்டம் இல்லாத
செயற்கையை ஏன் நம்புகிறீர்கள்
வளம் நிறைந்த இயற்கையை நம்புங்கள்
உங்கள் வாழ்க்கையில் உயருவீர்கள்.

தி.லக்ஷன்
தரம் - 08B

# விடுகதைகள்

1. உலகிலே உயரமான மலை எது?

   இமய மலை

2. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது?

   பாக்கு நீரிணை

3. கண்கள் இல்லாத பூச்சி இனம் எது?

   எறும்பு '

4. சிலந்திக்கு எத்தனை கண்கள்?

   08

5. அதிக முட்டையிடும் உயிரினம் எது?

   கறையான

6. உலகில் மிகப் பெரிய பாலூட்டி எது?

   நீலத் திமிங்கலம

7. உலகில் அதிக நாடுகளைக் கொண்ட கண்டம் எது?

   ஆபிரிக்கா

8. உலக சுகாதார தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

   ஏப்ரல் 7

9. உலக உயிரினங்கள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

   ஒக்டோபர் 3

10. உலக சமாதான் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

    ஓகஸ்ட் 6

ஜெ.அஜித்குமார்
தரம் - 08B

## விடியலுக்காக

நீதி கேட்கும் கண்களிலே
நீந்திச் செல்லும் சோகங்களும்
கன்னக் குழியில் புதையும்
கண்ணீர்க் காட்சி
வாழும் உரிமை பறிக்கப்பட்டவர்கள்
உறவுகள் நீங்கள்
மாற்றுத்திறனாளிகள் ஆக்கப்பட்டவர்கள்
அகதி அநாதையாகி நிற்பவர்கள்
இரும்புக் கம்பிக்குள் இடர்பட்டு நிற்பவர்கள்
தமிழுக்காய் இன்பத்தை தொலைத்து
துன்பத்தை ஏற்றுக் கொண்டவர்கள்
நீங்கள் தான் வன்னி மக்களே
அநீதியை எதிர்த்து நிற்கும்
உங்கள் பார்வை நீதியைக் கொண்டே இருக்கின்றதே
நீங்கள் விடும் மூச்சில் நிச்சயம்
அநீதி அழிக்கப்படும்
விடியலுக்கான உங்கள் கனவுகள்
நிறைவேறும் பொறுத்திருங்கள்

ஸ். மைக்கல் றொபட்
தரம் - 08A

## ஆண்டு நிறைவு விழாக்கள

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | - | காகித விழா |
| ஐந்து வருடம் | - | மர விழா |
| பத்து வருடம் | - | தகர விழா |
| இருபத்தைந்து வருடம் | - | வெள்ளி விழா |
| முப்பது வருடம் | - | முத்து விழா |
| நாற்பது வருடம் | - | மாணிக்க விழா |
| ஐம்பது வருடம் | - | பொன் விழா |
| அறுபது வருடம் | - | வைரவிழா |
| எழுபத்தைந்து வருடம் | - | பவள விழா |
| எண்பது வருடம் | - | அமுத விழா |
| நூறாவது வருடம் | - | நூற்றாண்டு விழா |

இ. நிரோஜன்
தரம் 10

## பொது அறிவு.

1. அணுகுண்டின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
   ஆன்ட்ரிக்கோ போர்ம்.

2. பென்சிலின் மருந்தை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
   ஆலெக்ஸ்சான்டர் பிளேமிங்.

3. சின்னம்மை தடுப்பூசியை கண்டு பிடித்தவர் யார்?
   ஏட்வேர்ட் ஜேனர்.

4. மனோ தத்துவியலின் தந்தை யார்?
   குக்மன் ப் ரொய்ட்

5. மைக்ரசோப்ட் நிறுவனத்தின் உரிமையாளர் யார்?
   பில்கேட்ஸ்

ஒ.விஸ்னுயன்
தரம் - 8B

## மாணவர் நாம்

நல்ல கல்வி தேடி நாமும்
கற்றிடுவோம் - எம்
எதிர்கால வாழ்க்கையையும்
எண்ணிடுவோம்

வல்லவராய் பாரில் எங்கும்
திகழ்ந்திடுவோம் - நல்ல
ஒழுக்கமாக வாழ நாங்கள்
முயன்றிடுவோம்

அன்பு நீதி பொறுமை கொண்டு
வாழ்ந்திடுவோம் - நல்ல
சேவைதனை ஆற்றி நாமும்
மகிழ்ந்திடுவோம்

எம் விடுதிப் பெருமை போற்ற
வாழ்ந்திடுவோம்
நல் வரலாற்றில் இடம்பிடிக்க
முயன்றிடுவோம்

ஸ்.மைக்கல் றொபட்
தரம் - 08B

## எங்கள் பாடசாலை

எங்கள் பள்ளி நல்ல பள்ளி
என்று நானும் சொல்லுவேன் - எனது
அறிவுக் கண்ணை திறந்த கோயில்
என்று சொல்லிக் கொள்ளுவேன்

கல்விச் செல்வம் தந்த ஆசான்
எனது வாழ்வில் தெய்வமாய் - நல்ல
கல்வி கற்ற எனது மனம்
தெய்வம் வாழும் கோயிலாம்

அன்னை தந்தை அன்பு கொண்டு
என்னை நன்கு வளர்த்தனர்
எனது மனதில் எழுந்த ஐயம்
அருகில் நின்று தீர்த்தனர்

நாளும் நன்கு படிக்க நானும்
பள்ளி முதல் மாணவன் - என்ற
பெயரை பெற்று பெரும் புகழை
பள்ளிக்கு நான் சேர்ப்பவன்

தி.நிஷாந்தினி
A/L (2015)
கலைப்பிரிவு

## விடுகதைகள்

1. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
உள்ளங்கை

2. ஒரு குப்பிக்குள் இரண்டு தைலம் அது என்ன?
முட்டை

3. முத்து லெச்சிமியை பிடித்து முதுகுத்தோலை உருச்சுபச்ச வெண்ணையைப் பூசி குச்சி வீட்டுக்கவைத்தா அது என்ன?
வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு

4. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது தலை அது என்ன?
மரம்

5. வெள்ளித் தட்டு கிணற்றில் விழுந்து விட்டது ஆனால் எடுக்கவில்லை அது என்ன?
சந்திரன்

6. விண்ணை சிரிக்கச் செய்வாள் கண்ணைப் பறிக்கச் செய்வாள அவள் யார் ?
மின்னல்

7. முச்சந்தியில் மூன்று விளக்கு பார்த்து நடந்தால் பாதுகாப்பு அது என்ன?
சுமிக்சை விளக்கு

8. என்னிடம் நாடு உண்டு ஆனால் வீடு இல்லை கடலுண்டு ஆனால் மீன் இல்லை மலை உண்டு பறவைகள இல்லை காடு உண்டு மரம் இல்லை அது என்ன?
தேசப்படம்

வ.டினோசன்
தரம் 11B

# பழமொழிகள்.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அக்கரை மாட்டிற்கு இக்கரை ப்ச்சை.
3. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
4. அச்சாணி இல்லா தேர் முச்சானும் ஓடாது.
5. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்.
6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
7. அடாது செய்பவன் படாது படுவான்.
8. அடி செய்கின்றது அண்ணன் தம்பி செய்யார்.
9. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்.
10. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
11. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
12. அடியாத மாடு படியாது.
13. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
14. அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
15. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்வான்.
16. அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும்.
17. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
18. அளக்கிற நாழி அகள விலையறியுமா?
19. ஆசை வெட்கம் அறியாது.
20. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
21. ஆடு கொளுக்கிறது இடையனுக்கு இலாபம்.
22. ஆணைக்கும் அடி சறுக்கும்.
23. ஆணைக்கு ஒரு காலம் பூனைக்கொரு காலம்.
24. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
25. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை.
26. இரக்கப் போனாலும் சிறக்க போ.
27. இஞ்சி இலாபம் மஞ்சளிலே.
28. இருந்தால் மூதேவி நடந்தால் சீதேவி.
29. இல்லாது பிறவாது அள்ளாது கிறையாது.
30. இறுகினால் களி இளகினால் கூழ்.
31. இக்கரை மாட்டிற்கு அக்கறை பச்சை.
32. இறைக்கின்ற கிணறு ஊறும்.
33. இளங்கன்று பயமறியாது.
34. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
35. உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
36. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
37. உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
38. ஊர்வாயை மூட உலை மூடியில்லை.
39. ஐந்தில் வளையாது ஐம்பதில் வளையுமா?
40. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
41. காற்றுள்ள போது தூற்றிக்கொள்.
42. சிறு துரும்பு பல்லு குத்த உதவும்.
43. சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.

அ.அன்ரன்லியோ
தரம் - 9B

## தொடர்மொழிக்கு ஒருமொழி

1. அநாதை : தாய் தந்தையாரை இழந்தோர்.
2. அந்தப்புரம் : அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்கு அமைந்த தனியிடம்.
3. அலி : ஆணும் பெண்ணுமற்ற தன்மை.
4. அல்லங்காடி : மாலையில் அல்லது இரவிற் கூடும் சந்தை
5. ஆச்சிரம் : தபேதனர் வசிக்கும் இடம்
6. ஆத்திகன் : கடவுள் இருக்கிறார் என்று நம்புபவன்
7. எய்ப்பில் வைப்பு : பிற்காலத் வேவைக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்
8. ஏகபோகம் : தனக்கே உரிமையாக முழுப்பொருளையும் அனுபவித்தல்
9. ஐம்புலன் : சுவை,ஒளி,ஊறு,ஓசை,நாற்றம் என்னும் ஐந்துணருவு
10. ஐம்பூதம் : நிலம்,நீர்,தீ,வளி,வான் என்னும் ஐம்பொருள்
11. ஒப்பரவு : உலக நடையறிந்து ஒழுகுதல்
12. கப்பம் : பகையரசருக்கு கொடுக்கப்படும் திறைப்பொருள்
13. சிறுபட்டி : கட்டுக்கடங்காத இளைஞன்
14. சிலேடை : இருபொருள் அமையத் தொடுப்பது
15. சுரங்கம் : நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசியவழி
16. சுயம்பு : ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது
17. சுயசரிதை : ஒருவர் தாமே தம்மைப்பற்றி எழுதும் வரலாறு
18. தீர்க்கதரிசி : எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்
19. வாதி : வழக்கைத் தாக்கல் செய்பவன்
20. பிரதிவாதி : வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன்

அ.வினுஸ்ரன்
தரம் - 08B

## சிறுவர்.

சிறுவர் நாங்கள் முத்துக்கள்
எதிர்கால நாட்டின் முத்துக்கள்
எங்களை வாழ விடுங்கள்
வளர வழி காட்டுங்கள்

நாங்கள் விடும் தவறுகளை
பெரியோர்களாகிய நீங்கள் பொறுங்கள்
உங்கள் அன்பால்
எங்களை ஆழுங்கள்

எங்களுக்க என்ன தெரியும்
நீங்கள் தானே சொல்லித் தர வேண்டும்
எங்களை துஸ்பிரயோகம் செய்யாதீர்கள்
எங்களை நல்வழி காட்டுங்கள்.

வி.விவக்ஸன்
தரம் - 08B

## ஆங்கிலமும் கணணியும்

- இன்றைய வாழ்விலே கணணியும் ஆங்கிலமும் முக்கிய இடத்தை பெறுகின்றன.
- இன்று கணணி ஒரு மனிதனின் எதிர் காலத்தையே மாற்றுகின்றது.
- கணணி இல்லாவிடில் இன்றைய வாழ்க்கையில் மனிதன் வாழ்வதில் அர்த்தமில்லை.
- இன்றைய கால சூழ்நிலைகளிலே மனிதனுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதும் கணணி தான்.
- இப்போதெல்லாம் மனிதர்கள் மனிதனின் பேச்சையே நம்புவதில்லை ஏன் அவன் பேச்சையே நம்புவதில்லை
- இதற்கெல்லாம் காரணம் கணணி தான்.

கே.அனற்றோன்
தரம் - 08B

## வாழ்வு

பாசம் எனும் கடலினுள்
உறவு எனும் துடுப்பிலும்
வாழ்க்கை என்னும் படகிலே
பயணிக்கின்றேன்.....
ஆனால் என் படகிற்கு துவாரம் வந்து விடுமோ?
அல்லது என் கண்ணீர் என் படகை தாட்டிடுமோ?

என் மனதுக்குள் நினைக்கின்றேன்
கரை போய் சேருமென்று...
ஆனால் என் வாழ்க்கை படகு கரை போய் சேருவதற்கு
கல்வி எனும் இயந்திரம் தேவையே!
கண்டு கொள்வாயா என் மனமே.

ஸ். மைக்கல் றொபட்
தரம் - 08A

## விடுகதைகள்

1. பழகினால் மறக்காதவன் பயந்தோரை விடாதவன் அவன் யார்?
   நாய்.

2. நோயுமில்லை நொடியுமில்லை ஆனால் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே போவான் அவன் யார்?
   நாட்காட்டி.

3. காட்டில் பச்சை,கடையில் கறுப்பு,வீட்டில் சிகப்பு அது என்ன?
   தேயிலை.

4. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டே இருப்பான்.அவன் யார்?
   பூமி

5. வாய் இல்லை வார்த்தைகள் சொல்லுவான், உயிர் இல்லை ஊருக்க பறப்பான்,வீட்டை தேடி வருவான் அவன் யார்?
   கடிதம்.

ர.கிருபாகரன்
தரம் 7B

## அன்னையைப் போல்

பத்து மாதம் சுமந்து பெற்றவள் எம் தாய்
நாம் பிறக்கு முன்னே எம்மை அறிந்தவள்
எம் அன்னை கன்னிமரி.

அன்னை என்றும்
தந்தை என்றும்
பலர் உறவு சொன்னாலும்
நாம் அழைக்கும் போது
எம்மை பாதுகாப்பவள்
எம் மரியா

மீட்பின் பாதையில் தன்னை இணைத்தவள்,
மீட்புக்காக தன் மகனை ஈன்றவள்
இறைவனின் அடிமை என்று
இவளுடன் நானும் அடிமையாகின்றேன்
இறைவனின் அன்புக்கு..

ரா.சேதுகரன்
தரம் - 07B

## "அம்மா" என்ற சொல்.......

உன்னுள் கருவேற்றி
ஈரைந்து மாதங்கள்
கருவறையில் சுமந்து
உன் கண்ணீருக்கும்
என் அழுகைக்கும்
இடையே மறுப்பிறப்பெடுத்தவள்
என் அழுகைக்கு
நேரம் அறிந்து
காரணம் அறிபவள்

நான்
நடை பழக
எனக்கு கால்களாக
இருந்தவள்
நான் விழுந்து
அழும் முன்னே
கண்களில் நீர்கோர்த்து
என் வலி உணர்பவள்

நான் படிக்கும் வயதில்
தூக்கத்தை தொலைத்தவள்
உள்ளத்தில் வேதனை
பல இருந்தும்
நெஞ்சத்தில் வைராக்கியத்தோடு
என்னை வளர்த்தவள்
அதிக வேலையென்றாலும்
என்னை தூங்க வைக்க
தன் தூக்கம் தொலைத்தவள்

என் உடல்நிலை கோளாறில்
தன்னை வருத்திக்கொள்பவள்
இன்றும்எனக்கு
இரண்டாம் உயிராய்
வாழ்பவள்

உன்னுள் கருவேற்றி
ஈரைந்து மாதங்கள்
கருவறையில் சுமந்து
உன் கண்ணீருக்கும்
என் அழுகைக்கும்
இடையே மறுப்பிறப்பெடுத்தவள்

என் அழுகைக்கு
நேரம் அறிந்து
காரணம் அறிபவள்

நெஞ்சத்தில் வைராக்கியத்தோடு
என்னை வளர்த்தவள்
அதிக வேலையென்றாலும்
என்னை தூங்க வைக்க
தன் தூக்கம் தொலைத்தவள்

என் உடல்நிலை கோளாறில்
தன்னை வருத்திக்கொள்பவள்
இன்றும்எனக்கு
இரண்டாம் உயிராய்
வாழ்பவள்
உன்னை வர்ணிக்கும் அளவு
கவிஞன் ஆகிவிட்டேனோ

தெரியாது ஆனால்
என்னை கவிஞன்
ஆக்கி விட்டதும்
பிழை ஏதும் இல்லாமல்
சரியாக சொல்லியிருக்கிறான்
மாதா
பிதா
குரு
தெய்வம்
என்று இதில்
உன்னை மறந்திருந்தால் வாக்கிய
பிழையாக மாறியிருக்கும்

கையேந்துபவன் கூட
அன்னையின் பாசத்தில்
வீழ்ந்தவனாய்
அம்மா என்றே
அழைக்கிறான்
உனக்கு
ஆஸ்கார் பரிசோ
நோபல் பரிசோ
வாழ்நாள் தியாகி பட்டம்
ஏதும் தேவையில்லை
நான் உன்னை
தினம் தினம்
அழைக்கும்
"அம்மா" என்ற சொல்.......

றெ.அன்ரனி றோலன்ற்
A/L (2015)
கலைப்பிரிவு

## அச்சம் தவிர்

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான்.
மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான். பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்

பு.சகாயபென்கனன்
தரம் - 07B

# மொழி வளம்

| வழுநிலை | வழாநிலை |
|---|---|
| ❖ அப்ப | அப்போது |
| ❖ அண்டு | அன்று |
| ❖ அறுணாக் கொடி | அரைஞாண் கெடி |
| ❖ ஆத்தங்கரை | ஆற்றங்கரை |
| ❖ ஆம்பளை | ஆண்பிள்ளை |
| ❖ இளனி | இளநீர் |
| ❖ ஈக்கில் | ஈர்கு |
| ❖ எண்ணை | எண்ணெய் |
| ❖ ஒட்டறை | ஒட்டடை |
| ❖ ஒண்டு | ஒன்று |
| ❖ ஒத்தணம் | ஒற்றடம் |
| ❖ கட்டடம் | கட்டிடம் |
| ❖ கக்கட்டி | கட்கட்டி |
| ❖ கம்பிளி | கம்பளி |
| ❖ நஞ்சை | நன்செய் |
| ❖ நாகரீகம் | நாகரிகம் |
| ❖ நோம்பு | நோன்பு |
| ❖ பயத்தங்காய் | பயற்றங்காய் |

ம.சுலக்ஸன்
தரம் - 07B

## உண்மை பேசுவோம்

- உண்மை பேசுதல் உயர்ந்த பண்பாகும்.
- உண்மை உயர்வு தரும் என்பது முதுமொழி.
- நாம் என்றும் உண்மை பேசுதல் வேண்டும்.
- பொய் பேசுதல் பெரும் பாவமாகும்.
- "பொய் சொல்ல கூடாது பாப்பா" என்று பாரதியார் பாடியுள்ளார்.
- உண்மை பேசுவதால் உயர்வடையலாம் என்பதற்கு அரிச்சந்திரன் கதை நல்ல எடுத்துக் காட்டாகும்.
- உண்மை என்பதற்கு வாய்மை, சத்தியம், மெய் என பல பொருள் கூறுவர்.
- உண்மை சொல்லி கெட்டார் எவருமில்லை.
- மனதில் பொய் இல்லாமல் நேர்மையோடு வாழும் ஒருவன் உலகத்து சான்றோர்களின் மனங்களில் எல்லாம் உயர்வாக மதித்து போற்றப்படுவான். இது வான் புகழ் கொண்ட வள்ளுவர் வாக்காகும்.
- நாமும் உண்மை பேசி உயர்வடைவோம்.

யோ.அன்றூஸ்
தரம் - 08B

## நட்பு

ஓ இறைவா என்னுடைய நண்பர்களுக்காகவும் அவர்கள் கொண்டு வந்த மகிழ்ச்சிக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றேன். வேலைகளைப் பகிர்ந்து கொண்டதில் உண்டான ஆனந்தத்துக்காகவும், பிரச்சினைகளுக்காகவும, சிரிப்புக்காகவும் அத்துடன் சாகசங்களின் மகிழ்ச்சிக்காகவும்இஒருமித்துக் கற்கவும் உமக்கு நன்றி கூறுகின்றேன். அன்பு செய்யவும்இ அன்பு செய்யப்படவும் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். திறைமைக்காகவோ நன்மைக்காகவோ அல்ல ஆனால் பிழைகளுக்காகவும் வேற்றுமைகளுக்காகவும் நன்றி.

நண்பன் ஒரு உண்மையான பொக்கிசம் நட்ப்புத்தான் சூரிய பிரகாசம். மக்கள் செய்யும் அருமையானவற்றில் நட்பு ஒரு சிரிப்பு. இரு நண்பர்களால் பகிரப்பட்ட நல்ல நேரம். ஒரு இனிமையான நினைவு பாடலின் பிரிதிபலிப்பு போல, ஏதாவது பிழையாகப் போகும் வேளையில் நட்பு ஒரு ஊக்கமளிக்கும் புன்னகை போன்றதாகவும்.

“நட்பு ஒரு விசேட குரல், ஒரு அருமையான பழகிய முகம் நட்பு வாழ்வின் இனிய கொடை அந்த இடத்தை எதனாலும் எடுக்க முடியாது.”

நம்பிக்கை உள்ள நண்பன் பலமான காவலுக்குச் சமம்,அவனைக் கண்டடைந்தவன் செல்வதைக் கண்டடைந்தவன் போலாவான். நம்பிக்கை உள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றும் இல்லை. அவனது நம்பிக்கைக்கு எந்த அளவு பொன்னும், வெள்ளியும் நிகராகா. நம்பிக்கை உள்ள நண்பன் வாழ்வைத் தரும்மருந்து போல இருக்ன்றான். ஆண்டவருக்கு அஞ்சுபவர்கள் அவற்றை கண்டடைவார்கள். ஒரு நண்பனை வைத்திருப்பது கடவுள் கொடுத்த கொடைகளிலெல்லாம் தூய்மானது. ஏனென்றால், இந்த அன்பு பணம் கொடுத்து வாங்க முடியாது. இது சிறுபிள்ளைத் தனமானதுமல்ல, ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் கொண்டுவரக் கூடிய விபரிக்க முடியாத ஒரு நட்பு.

அகிலத்தை விட சூரியன் உதிக்கும் ஆகாயத்தை விட வேறு ஏதோ அதிகமாக நமக்குத் தேவை என்று கடவுளுக்குத் தெரியும் ஆகவே அன்பு செய்ய அவர் நண்பர்களை அனுப்பி தம் ஆன்மாவை உயரவைத்தார். நட்பு என்பது மதிப்பிட முடியாத ஒரு கொடை. அதை வாங்கவோ விற்கவோ முடியாது. ஆனால் அவன் பெறுமதி தங்கத்தால் ஆன மலையை விட பெரியதுஏனென்றால் தங்கம் குளிர்ந்தும், உயிரற்றதுமானது. ஆனால் பார்கவோ கேட்கவோ முடியாது.

இக்கட்டமானவேளையில் உற்சாகமுட்ட சக்தியில்லை. அதற்குக் கேட்பதற்குச் செவியுமில்லை. விளங்குவதற்கு இதயமும் இல்லை. அது உனக்கு வசதியை கொண்டு வராது. அல்லது உதவிக்கரம் நீட்டவும் முடியாது. கடவுளிடம் ஓர் கொடையைக் கேட்கும் போது அவர் வைரத்தையோ, முத்தையோ, செல்வத்தையோ அனுப்பாது உண்மையான நண்பனின் அன்பை அன்பை அனுப்பினால் நன்றாயிருக்கும்.

‘நாங்கள் சந்திக்கும் சில நண்பர்கள் ஒரு சொற்ப நேரம் நினைக்கிறார்கள் இன்னும் சிலர் விசேட செயலுக்காக அல்லது புன்னைகைக்காக ஞாபகத்தில் நிற்கின்றார்கள். போல் தெரிகின்றது. ஆனால் நம்முடைய இதயத்தில் நிற்பவர்கள் மிகமிகச் சொற்பமே அந்த வகையான ஒரு நண்பனைத்தான் நான் உன்னில் கண்டேன்’

நட்பு என்பது இரு மனங்களில் ஏற்படுகின்ற அன்பின் விளைவு. எனவே நட்பு எனும் கொடை இறைவனால் அருளப்பட்ட கொடை நட்பு ஆகும்

இ.நிரோஜா
A/L (2015) கலைப்பிரிவு

## ஆசிரியத் தொழிலும் கல்வி உளவியலும்

உளவியல் என்றால் என்ன என்பதற்கு தொடக்க காலங்களில் அளிக்கப்பட்ட விளக்கமானது "ஆன்மாவைப் பற்றிய அறிவு" என்றிருந்தது. பின்னர் " மனம் பற்றிய அறிவு" எனக் கொடுக்கப்பட்ட விளக்கமும் திருப்தி அளிக்காமையினால் " நனவு நிலையை குறிக்கும் அறிவியல்" என விளக்கமளிக்கப்பட்டது. இக்கருத்தும் ஏற்க்கப்படாத நிலையில் தற்காலத்தில் " நடத்தை பற்றிய அறிவே உளவியல்" என்கின்றனர். இருப்பினும் நவீன உளவியல் சிந்தனையாளர்கள் "நடத்தை பற்றிய நேரிடையான அறிவியலே " உளவியல் என்கின்றனர்.

கல்வி உளவியல் என்பது மாணவரிடம் ஏற்படும் நடத்தை மாற்றங்களை பற்றிய அறிவாகும். பொது உளவியல், சமூகவியல், குழந்தை உளவியல் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கண்டுபிடிப்புக்களை கல்வி செயற்பாட்டில் பிரயோகிப்பதே இக் கல்வி உளவியலின் பிரதான நடவடிக்கையாகும். இந்த கல்வி உளவியலானது மாணவரின் உடல், உள, மனவெழுச்சி, சமூக வளர்ச்சிகள் பற்றிய விடயங்களையே பெருமளவிற்கு கொண்டுள்ளது. மாணவரின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் கற்றலினூடாக அவர்களுக்கு வழிகாட்டுதலின் கணிசமான அளவிற்கு ஆசிரியர்க்கு கல்வி உளவியல் உதவுகிறது. பாடம் சார் நிபுணத்துவத்தை ஆசிரியர் பெற்றிருக்கும் அதே வேளை கல்வி உளவியல் தொடர்பான போதிய விளக்கமும் புரிந்துணர்வும் அனுபவமும் அவர் பெற்றிருப்பது அவசியமாகும். மனம் சார் உழைப்புக்களில் உள்ளடங்கும் ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு கல்வி உளவியல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

கல்வி உளவியல் மாணவரின் உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூகதொடர்பு ஆகியவற்றின் வளர்ச்சி நிலைகள் மாணவரின் தேவைகள், விருப்பு, வெறுப்புக்கள், மனப்பான்மை, ஆளுமைப்பண்பு, தனியாள் வேறுபாடுகள் என்பவற்றையும் மாணவர்கள் எவ்வாறு கற்கின்றனர்? அவர்களிற்கேற்ற கற்பித்தல் முறைகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகிறது? வகுப்பறைக்கல்வி நிலை, வகுப்பறை முகாமைத்துவம், அறிக்கைக்கு ஆதாரமான புலக்காட்சியை வளப்படுத்தல் என்பன போன்ற பல விடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

ஆளுமை மிக்க மனிதனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கு என்பது கல்வி உளவியலாளர் வாதமாகும். உடல், உள, மனவெழுச்சி பெற்ற ஒருவனையே ஆளுமை உடையவனென கருதலாம். உள நலங்குன்றியவர்களால் சமூகத்திற்கு ஏற்படும் பிரச்சினைகள் பலவாகும். எனவே பாடசாலைகள் கல்வியை கற்பித்தல் மட்டுமன்றி ஆரோக்கியமான உடல், உளநலங் கொண்ட சமூகத்தை, நற்பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பை சமூகம் பாடசாலைகளிடம் ஒப்படைத்துள்ளது. எனவே சமூகப் பிரதிநிதியாகவும் பெற்றோரிற்கு பதிலீட்டாளராகவும் மத்தியஸ்தவராகவும் ஆதரவாளராகவும் பல வகிபாகங்களை வகிக்கும் ஆசிரியர் சிறந்த அறிவுடையோனாக இருப்பது மட்டுமன்றி மாணவரின் உளவியல் தேவைகளை புரிந்து கொள்ளகூடியவராக உளவளவாளராக மாணவரின் மனவெழுச்சி உறுதிப்பாட்டிற்குத் துணைநிற்பவராக மாணவரிடம் உளவலிமை, சுயநம்பிக்கையை ஏற்ப்படுத்துபவராக பாடசாலையின் தூரநோக்கத்தை அடையக்கூடிய உள நலங்கொண்டவராக இருப்பதன் மூலம் மாணவரின் உளநல விருத்தியை பேண

முடிவதோடு சிறப்பாக செயலாற்றவும் முடியும். இதற்காக ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் அவசியமாகும்.

ஆசிரியர் பெறும் தொழிலுக்கு முன்னரான கல்வி உளவியல் பற்றிய அறிவு, கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உயிர் நாடியாக விளங்கும் மாணவரின் தேவைகளை இனம்காணவும் நடத்தைகளை விளங்கி கொள்ளவும் எதிர்வு கூறவதற்கும் இயலுமானதாக இருப்பதோடு தேவைக்கேற்ப நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படும் நடத்தை மாற்றத்தை அடையமுடியாமல் சிக்கல்படும் மாணவர்களுக்கு வேண்டிய பின்னூட்டல்களை வழங்கவும் உறுதுணையாக இருக்கிறது. அதுமட்டுமன்றி மாணவரிடம் நற்பண்புகளும் நடத்தை மாற்றங்களும் ஏற்ப்படுத்தப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை ஆசிரியர் ஒருவர் கல்வி உளவியல் துணையுடனேயே அறிந்து கொள்ள முடியும். மேலும் கல்வியின் குறிக்கோள் சமூகத்தேவைக்காக மாணவரின் நடத்தையை மாற்றியமைப்பதாகும். இம்மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மாணவரை நன்கறிந்து விளக்கம் பெற்ற பின்னரே அதனை செயற்படுத்தக் கூடியதாக இருக்கும் .மாணவரை அறிவது என்பது உளவியல் சார்ந்திருப்பதால் ஆசிரியர்கள் கல்வி உளவியல் அறிவு பெற்றிருப்பது அவசியமாகும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர்களிடையே பரஸ்பர தொடர்புகள் இருக்கும் போதே சிறந்த பெறுபேற்றை அடைய முடியும். ஆசிரியர் - மாணவர்களிடையே இடைவெளி அதிகரிக்கும் போது தரமான வளமான கற்றல் நிகழ வாய்ப்பு குறைவாகும். தொடர்பின் நெருக்கமே சிறப்பான கற்றலுக்கு உதவும். ஆசிரியர்-மாணவர்களிற்கிடையில் எற்படும் இடைவினைகள் மனவெழுச்சிப் பரிமாற்றங்களோடு ஒன்றிணைந்திருப்பதால் வகுப்பறையானது செயல் திறன் மிக்க உளவியல் நிலைப்பட்ட சமூதாயமாக மாற்றமடைகிறது . இதன் மூலம் மகிழ்ச்சியான கற்றல் சூழல் மாணவர்களுக்கு ஏற்ப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஆசிரியர் - மாணவர்களிக்கிடையில் ஏற்படும் சமூக உறவுகள், அது சமூக மனவெழுச்சி, முதிர்ச்சி என்பனவற்றை பெறுவது இலகுவாக்கப்படுகிறது. ஒரு மாணவனை எவ்வளவு தூரம் ஆசிரியர் தன்பால் ஈர்க்கின்றாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவ்வாசிரியரின் பாடத்தில் மாணவர் ஆர்வம் காட்டுவார். மாணவர் மனங்களை வெல்வதன் மூலம் ஆசிரியர் சாதிக்கும் விடயங்கள் அதிகமானவை. எனவே சிறப்பான ஆசிரியர் - மாணவர் தொடர்பினால் ஆசிரியரது தொழில் சார் பணி இலகுவாக்கப்படுவதோடு மாணவர்களது உளநலமும் விருத்தியடைய உதவுகிறது. ஆகவே ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர் தொடர்புகள் உருவாகும் வகையில் கற்றல் கற்பித்தல் முறைகளைச் செயற்ப்படுத்துவதற்கு கல்வி உளவியல் பெரிதும் உதவுகிறது. எனவே ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் அவசியமாகும்.

கற்பித்தல் என்றால் என்ன? என்பதை விளங்கி கொள்வதே கல்வி உளவியலின் அடிப்படை எண்ணக்கருவாக உள்ளது. பிள்ளை விருத்தி தொடர்பாக கல்வி உளவியலின் மூலம் ஆசிரியர் பெறும் அறிவு மாணவர்களின் விருத்தி மட்டத்திற்கு பொருத்தமான கற்பித்தல் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள உதவுகிறது. ஆசிரியரின் கற்பித்தல் நடத்தை மாணவரின் அடைவு மட்டத்தில் செல்வாக்கு செலுத்துவதாக அறியப்பட்டுள்ளது. எனவே கற்பித்தலின் அடிப்படைகளை விளங்கி செயற்படுவதன் மூலமே வகுப்பறையை செயல்திறனோடு வைத்திருக்க முடிவதோடு அதுவே வகுப்பறை கற்பித்தலின் வெற்றியாகவும் அமைந்து விடுகிறது. அறிக்கை வாதம், நடத்தை வாதம் பற்றிய சிந்தனைகள் சிறப்பான வகுப்பறைக்

கற்பித்தலுக்கு உதவியாக அமைகிறது. வகுப்பறை கற்பித்தலின் வெற்றி, மாணவரின் சிந்தனை விருத்தி, பிரச்சினை விடுவித்தல் என்பன கல்வி உளவியல்சார் கோட்பாடுகளை கோட்பாட்டு அடிப்படையில் கற்பதால் ஏற்படுகிறது. எனவே கல்வி உளவியல் பற்றிய அறிவு ஆசிரியருக்கு அவசியமாகும்.

கலைத்திட்டத்தை உள்ளடக்கிய உளவியலாக கல்வி உளவியல் இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. யாருக்கு கற்பிப்பது? கற்பிக்க வேண்டியவை என்ன? எவ்வாறு கற்பிப்பது? எத்தகைய விளைவுகளுடன் கற்பிப்பது? மாணவர் அடைவுகளை எப்படி மதிப்பிடுவது? தண்டனைகள் எவ்வாறு வழங்கப்படுகிறது? பாடசாலையில் உளநலம் எவ்வாறு பேணப்படுகிறது? எவ்வாறு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்? எவ்வாறு வகுப்பறையை முகாமைத்துவம் செய்வது? எவ்வாறு ஒருவரின் ஆளுமை மற்றவர் மீது செல்வாக்கு செலுத்துகிறது? சமூக விருத்திக்கு ஏற்ற வகையில் எவ்வாறு மாணவர்கள் உருவாக்கபடுகிறார்கள்? போன்ற செயற்பாடுகளில் கல்வி உளவியல் நேரடியாக பங்கெடுக்கிறது. எனவே கல்வி உளவியல் பற்றிய அறிவு ஆசிரியருக்கு அவசியமாகும்.

ஆசிரியத்துவத்தின் மேம்பாட்டுக்குரிய உளவியலாக கருதப்படும் கல்வி உளவியலில் கற்றல் கோட்பாடுகள், நினைவில் நிறுத்தல், மறத்தல் பற்றிய கோட்பாடுகள், இடமாற்ற கோட்பாடுகள், போன்றன உருவாக்கப்பட்டுள்ளமையால் இவை ஆசிரியரின் வாண்மை புலக்காட்சியை வளமாக்கல் மற்றும் பலப்படுத்துவதற்கு பெரும் உந்து சக்தியாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி இன்றைய பாடநூலாக்கம் என்பது கூட கல்வி உளவியல் கோட்பாடுகளை வலுப்படுத்தல், உருப்பெறச்செய்தல், பின்னூட்டல், கல்வி தொழில்நுட்பம் உருவாகுதல் போன்ற கற்பித்தலின் புதிய புதிய உத்திகளையும் அணுகுமுறைகளையயும் கல்வி உளவியல் ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளதோடு ஆசிரியரின் தேடல் தொடர்பான நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் கல்வி உளவியல் ஆசிரியர்களுக்கு அவசியமாகும்.

ஆசிரியரின் ஆளுமை விருத்திக்கும் அவ்விருத்தி தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் தேவையான வழிகாட்டல்கள் கல்வி உளவியலால் வழங்கப்படுகிறது. கல்வி உளவியலால் ஆசிரியர் தன்னை பற்றிய சுய விளக்கத்தை பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆசிரியரின் ஆளுமையை பொறுத்தே மாணவரின் ஆளுமையும் நடத்தையும் அமையும். ஆசிரியர் ஒருவரின் கடமை அல்லது பொறுப்பு மாணவரின் மீது செல்வாக்கு செலுத்துவதாக இருக்கிறது. அதாவது ஆசிரியர் தனது உள சக்தியை பாவித்து மாணவர் சக்தியைப் பயன்பாட்டில் இயங்க செய்வதால் அவர் கல்வி உளவியல் பற்றிய அறிவை தொழிலுக்கு முன்பே பெற்றிருப்பது, தன்னைப் பற்றிய சுய விளக்கத்தை பெறவும் அதனூடாக மாணவரின் குணவியல்புகள், வளர்ச்சி பருவங்கள், மனவெழுச்சி, சிக்கல்நிலை, மாணவரிடம் செல்வாக்கு செலுத்தும் சூழல் காரணிகள், பண்புகளின் உருவாக்கம், அழகுனர் திறன்கள், சமூக இசைவாக்கம் என்பவற்றை விளங்கி கொள்ள முடிவதோடு மாணவரை வழிநடத்தவும் இலகுவாகிறது.

மஸ்லோவின் தேவைக் கோட்பாடு மற்றும் ஊக்கல் கோட்பாடுகள் பிள்ளைகள் தமது விருப்பங்களை அடைய முடியாத போது உளநெருக்கீடிற்கு உள்ளாவதாக கூறுகிறது. மாணவர்களின் தனித்துவங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கவனத்தில் கொள்ளப்படாமையால் மாணவர்களிடம் உளமுரண்பாடுகளும் உளநெருக்கீடுகளும் ஏற்படுகின்றன. அதனால் பிறழ்வான நடத்தைகளை மாணவர்கள் காண்பிக்கின்றனர். பல்வேறுபட்ட சூழல், குடும்ப சூழ்நிலைகள், சமூக பொருளாதார ஏற்றதாழ்வு அடிப்படையிலான நிலைமைகள் போன்றவற்றில் இருந்தும் பல்வேறு

உளநெருக்கீடுகளிற்கு உட்பட்டு மாணவர் பாடசாலைக்கு வருகின்றனர். குடும்ப பிரச்சினைகள், பிளவுகள், இழப்புக்கள், வறுமை, நோய், போரால் இடம்பெயர்வு, முகாம் வாழ்வு, சிறு வயதில் குடும்பத்தை சுமத்தல், துஷ்பிரயோகங்கள் போன்ற பல பிரச்சினைகளிற்கு உட்பட்ட மாணவர்களை ஆசிரியர் சந்திக்க நேரிடும். அதுமட்டுமன்றி கவனக்குறைவு, பீதி, மனவடு, விரக்தி, போன்ற உளப்பிரச்சினைகளை உடையவர்களையும், மீத்திறன் மாணவர், சராசரி மாணவர், மெல்லக்கற்போர், நெறிபிறழ்வானோர், விசேட தேவையுடையோர் போன்றோரையும் சந்திக்க நேரிடும். எனவே அவர்களை இனம் கண்டு அவர்களது உளப்பிரச்சினைகளை சீர்படுத்தும் பொறுப்பும் அவர்களது உடல், உள வளர்ச்சிக்கேற்ற கவனமான கற்பித்தல் உத்திகளை உரிய உபகரணங்களுடன் கற்பிக்க வேண்டிய தேவையும் அவரவர்களிற்கென உளவியல் சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளை பயன்படுத்த வேண்டிய கட்டுப்பாடும் ஆசிரியர்களுக்கு உண்டு. ஆதலால் மாணவர் உளநலத்திற்கு முக்கிய பங்காற்றுவதற்கு ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் அவசியமாகும் என்றால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


1. சின்னத்தம்பி, க.சுவர்ணராஜா, (2007) அறிக்கை தொழிற்பாடுகளும் ஆசிரியரும், குரு வெளியீடு வவுனியா

2. பெனடிக்ற்பாலன், யோ(2005)கல்வி உளவியல் அடிப்படைகள்

3. முத்துலிங்கம்.ச (2007) கல்வியும் உளவியலும் பகுதி1

4. நவரட்ணம்.உ (2007) கற்றல் கற்ப்பித்தல் செயன்முறையில் கல்வி உளவியல், குமரன் புத்தக இல்லம்

5. கலாமணி.த(பெப்ரவரி 2009) கல்விச்சீர்மியமும் பன்முக நுண்மதியும்-அகவிதி ப. 26-28



ஆசிரியர்

திரு ந. சசிகுமார் M.A , B.A(hons),Dip in Edu